**முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

SC. No. 95/2015
பக்கம் 3
PW 7 வினோத்ராஜ்குமார் (மருத்துவர்)

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 சக்திவேல் என்னிடம் வந்தபோது சுயநினைவுடன் தான் இருந்தார். அ.சா.1 108 ஆம்புலன்ஸ் மூலமாக அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு சகிச்சை அளிக்க வேண்டி மருத்துவமனைக்கு வந்தார். அ.சா.1 ற்கு அவருடைய தலையின் பின் பகுதியில் 5X2X1 Cm சிதைந்த காயம் காணப்பட்டது. அ.சா.1 31.01.2015 முதல் 01.02.2015 வரை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். அ.சா.1 ற்கு மேற்சொன்ன காயத்தை தவிர அவருடைய உடலில் வேறு எங்கும் காயங்கள் இல்லை என்றால் சரிதான். ஒரு நபர் 10 ல் இருந்து 15 அடி உயரத்தில் இருந்து கீழே விழுந்து கூர்மையான பொருளின் மீது படும்போது அ.சா.1 ற்கு ஏற்பட்ட காயம் ஏற்பட வாய்பப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

Sd/-. K.S.அருண்சபாபதி
முதன்மை சார்பு நீதிபதி
காஞ்சிபுரம்